27-1-1991

Subscription

Inland : Rs. 100/-
*For Advertisement*

Apply to:
THE MANAGER
'The Morning Star,
Diocesan office,
Vaddukoddai.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka
under No. Q / J / 104 / News / 89

*Established : 1841: A Christian Weekly: Published Every Friday*

Vol:- 150 Jaffna, Friday 7 December 1990 No: 25

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROAGH TO ANY PEOPLE

*News and Articles in Tamil and English Please send them to:*

THE EDITOR,
'The Morning Star,
Diocesan office,
Vaddukoddai.

## The Celestine Fernando Memorial Lecture

The Ceylon Bible Society and friends of the late Rev. Celestine Fernando (1914 - 1989) have decided to set up a Celestine Fernando Memorial Trust Fund, interest from this fund will be used among other programmes for a periodical commemoration lecture which will promote the causes with which the late Celestine Fernando was associated.

### The Struggle for Justice

A memorial inaugnral address on the theme The Struggle for justice was delivered by the Rev. Somasiri K. Perera, a former Principal of the Pilimatalawa Theological Seminary and also a former President of the Sri Lanka Methodist Conference on the 8th of Oct. at the Sri Lanka Foundation Institute in Colombo. The Rev. Perera in his lecture begins with a study of the biblical understanding of justice He points out as Jeremiah did that "righteousness is indispensable for the understanding of the religion of the Israelites". "This is the name by which he will be called: The Lord is our righteousness" (Jer 23:6). He goes on to point out that the Bible is primarily a record of what God has done with this world and is concerned with history, not only Hebrew history, but of the history of other nations as well. The key to understand the history of the Hebrew people is their oppression and their liberation from oppression. The oppression - liberation theme is at the heart of biblical faith, The Rev. Perera goes on to point out how this biblical message is relevant today to the problems of the poor and the oppressed.

The oppressor exerts pressure on the oppressed. Force is used to get work done.

Oppression degrades the poor. The result is dehumanisation and depersonalisation. One important task today is to identify the oppressor and the oppressed. Whenever the Bible speaks of oppresion it also identifies the oppressors and the oppressed.

Today within the nation, when a ruling class gains power and authority, various methods of oppression are used. Many of which can be paralleled in the Old Testament. Exploitation of workers, fraud, usury, bribery.

### The Church speaks out

In the last part of the lecture, the Rev. Perera summarises the thinking of the Asian Mission Conference (A M C) of the Christian Conference of Asia (C C A) which was held in Indonesia in September 1989 with a view to seeing what God was saying to the Churches in Asia today. "The important question for us is not what God is doing with the Church, but rather what God is doing in Asia, so that the Church may discern where Jesus Christ is at work and respond to Him as he acts, making His presence and Lordship known". "The mission of God among the suffering people of Asia is to restore their life and dignity to the fullest, so that the image of God may be realised among them ............ the suffering and struggling peoples of Asia are the people of God. This is what we believe and confess".

### The Struggle for Justice in Sri Lanka

In his concluding remarks the Rev. Perera refers to the struggle for justice in Sri Lanka. It is basically, he says, a problem of the use and sharing of power between the Sinhalese majority and the Tamil ethnic minority which consists of Ceylon Tamils and Plantation Tamils. One could say it is basically a conflict between the "oppressor" and the "oppressed".

The seeds of the problem go back to the first constitution. After the independence major problems arose resulting in grievances which remained and festered. The Citizenship Act of 1948 which made a million people of Indian origin who had earlier voted in the elections of 1931, 1936 and 1947 disenfranchised.

The passing of the Official language Act in 1956, making Sinhala the only offical language gave cause for another grievance. Other powerful elements in the situation are the

(Continued on page 4)

## GREEN - LIGHT FOR EXTERNAL DEGREES

The University Grants Commission has given the right of conducting Arts and Science Degree Examinations for the external Students, to the University of Jaffna. Hither to, Examinations for the external Students were conducted only by the University of Peradeniya. It is also hoped that some colleges will be affiliated soon to the universities, to meet the increasing demand for higher education.

## EXAMINATION SUCCESS

Mr. A. A. Paul, of the staff of Jaffna College and worker - in charge, Araly Church has passed his B. D. Examination of the Serampore University. He followed the B. D. Course as an external student of the Tamilnadu Teological Seminary, Madurai.

Mrs. Indrane Jeyakumaran B.sc. (Zoo) Special, Dip. Ed. wife of the Rev. A. Jeyakumaran and of the staff of Jaffna College has passed the Preliminary M. A. Examination conducted by the Department of Education of the University of Jaffna, She will be submitting her dissertation on 'The American Mission's Contribution for the Development of Female Education In Jaffna'.

## AN APPRECIATION

### Mrs. Sybil Saverimuttu.

Mrs. Sybil Saverimuttu (nee Somanader) was a born teacher like her illustrious father, the late Mr. S.V.O. Somanader, one time Principal of Methodist Central College, Batticaloa. She was "Sybil-Teacher" to all the pupils who passed through her hands, both at Arasady school where she taught for some time, and at Vincent Girls' High School, Batticaloa, where she spent most of her career as a teacher. She was a very conscientious and dedicated teacher, and was much loved by both colleagues and students. She always tried to be a 'perfectionist' in everything that she did, and was found to set an example and a "standard" to her students to follow. Her special field in education, was English and Home-Science, in which she excelled. She was a very good cook, "cake" being her speciality, and was much in demand among friends and relatives, for Birthday cakes.

Sybil did not confine her activities within the four walls of the class-room. She was an active Guider and took part in all the Guide-activities, and carried on her duties most faithfully. She was a loyal and efficient Guider and served the movement for 25 years, for which, the National Association of Sri Lanka awarded her a bar for long and meritorious service in Guiding. She was also the Secretary of the Puliyantivu Women's Fellowship, for several years and was an asset and help in all the activities of the Church in Batticaloa. Perhaps what she most enjoyed, was as a teacher and Superinten-

(Continued on page 4)

## 175th Anniversary of the A. C. M. (1816-1991)

### A leaf from the past

#### Death of Mrs. Poor

On the 7th May 1821, the Mission sustained a severe loss in the death of Mrs. Poor. She was a woman of good native talents and well educated. In America she had been employed in teaching in different Schools with success. As the companion of a missionary, she was active, devoted, self denying and prompt in the performance of her relative duties. She took the entire mannagement of the temporal concerns of the station, including making provision for the boarding School, and overseeing the repairs of buildings, as well as the care of the family, so as to leave her husband at full liberty to pursue his appropriate labours.

Her end was joyful even triumphant. The notices of her last days, written by her afflicted husband, have been too extensively circulated to need repetition here. It was a privilege to stand by her dying pillow and hear her say,

*"Even my beloved husband and Children*
*Cease to be ties to bind me to earth*
*Every cord is now broken.*
*This is a victory for which I Scarcely dared to hope"*

It was instructive and impressive to hear her repeat, as she held up her skeleton hands and looked at them steadily.

*Corruption, earth and worms*
*Shall but refine this flesh.*

And also when at mid - night She was raised up in bed, near an open window, through which only darkness was visible, to hear her say -"there is outer darkness" and as a dog howled, to add as she recoiled from the thought, "without are dogs". And it was affecting when, near the closing scene, the little circle at her bedsde commenced singing

*"Jesus with all thy saints above"* to hear her trembling voice unexpectedly burst forth, and while her countenance reflected "glory begun" rise higher and clearer in its thrilling tones until it subdued that of her weeping friends and was heard alone in the song of praise.

She said
*"I See Jesus all bright and glorious; all bright and glorious. His chariot wheels how bright they are; how bright and glorious"*

(Continued on page 4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயதாரகை

UTHAYA THARAKAI

Estd. 1841.

மலர் 150 7 - 12 - 90 இதழ் 25


### வருகையின் காலம் மூன்றாம் ஞாயிறு 16. 12. 1990.

### ''முன்னோடி''

ஏசா 40:1–11, 1 கொரி 4:1-5, யோவான் 1:19-29

''இதோ உங்கள் கடவுள்'' ஏசா 40:9

நமது ஆண்டவரின் வருகையுடன் நெருங்கிய சம்பந்தம் உள்ள ஒருவர் யோவான் ஸ்நானன் என்பதை இன்று நினைவு கூருகிறோம். ஏசாயா 40-ம் அதிகாரம், மல்கியா 3-ம் அதிகாரம் போன்ற தீர்க்கதரிசன பாகங்களில் குறிப்பிட்ட, ''கர்த்தருடைய வழியை ஆயத்தப் படுத்துபவர்'', கர்த்தருக்கு ''முன்பாகப் போய் வழியை ஆயத்தம் பண்ணுபவர்'', யோவான் ஸ்நானனே என்பது நான்கு நற்செய்தி நூல்களினதும் ஒரே சாட்சியாயிருக்கிறது. தீர்க்கதரிசிகள் குறித்த ''முன்னோடி'' யோவான் ஸ்நானனே என்பது திருச்சபையின் நம்பிக்கை. இந்த முன்னோடியின் செய்தி என்ன? எப்படி அச்செய்தியை வெளிப்படுத்தினார்? என்பவற்றைக் கவனிப்போம். ''புல் உலர்ந்து பூ உதிரும்; நமது கடவுளுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும்'' (ஏசா 40:8) மனிதரும் மனித சக்திகளும் புல்லையும் பூவையும் போல் நிலையற்றவைகளான படியால் கடவுளுக்கும் கடவுள் மக்களுக்கும் எதிர்த்து மனித சக்திகள் எப்படி இயங்கினாலும் ''பயப்படாமல் சத்தமிட்டு... இதோ உங்கள் கடவுள்'' என்ற செய்தியே முன்னோடியின் செய்தி. வருகிற கடவுள் ''பராக்கிரமசாலியாக வருவார்; அவர் தமது புயத்தினால் அரசாளுவார்'' என்பதே கடவுளைப்பற்றி முன்னோடி கூறும் உறுதியான தகவல்.

யோவான் ஸ்நானன், தீர்க்க தரிசன வார்த்தைகள் குறிப்பிட்டவர் இயேசுவே என்பதை நம்பி ''அவர் இவர்தான் என்று சத்தமிட்டுக் கூறினான்'' (யோ 1:15). அது மாத்திரமன்று இயேசுவிற்கூடாக வெளிப்படும் கர்த்தரின் பராக்கிரமம், தமது புயத்தினால் அரசாளும் சக்தி எவ்வகை என்பதையும் உள்ளுணர்வு பெற்று ''இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி'' என்று சாட்சிபகர்ந்தான். 'கடவுளுடைய புயப்பெலன் பட்டயத்தை எடுப்பதனால் அல்ல சிலுவையில் அறையப்படுவதினால் பிறக்கும் பெலன், காயத்தை உண்டாக்கும் பெலன் அல்ல காயப்பட்ட கரங்களிலிருந்தே பிறக்கும் பெலன். அவர் ஆளுகை சிங்கத்தினதின் சக்திபோல் குறைந்த பெலனுள்ள பிராணிகளை அடக்கி, ஒடுக்கி, பீறிக் கிழித்து, சுரண்டிப் பிழைக்கும் வாழ்க்கை முறை ஆட்சியல்ல. பலிபீடத்தில் பலியாக ஒப்பிடப்படும் ஆட்டின் பெலன் போன்றது. பிறரைத் தனக்கெனப் பாவிக்கும் வாழ்க்கையின் முறையல்ல, தன்னைப் பிறர் வாழ்வதெற்கென்று அர்ப்பணம் செய்யும் வாழ்க்கை முறையே. ''இதோ உங்கள் கடவுள்'' (ஏசா 40:9) என்ற முன்னோடியின் செய்தி ''இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி'' (யோ 1:29) என்ற அறைகூவலாக மாறுகிறது. ''நான் சொன்னேனே அவர் இவர்தான்'' என்று, இயேசுவைக் குறித்தே முன்னோடியாக வந்த யோவான் ஸ்நானன் ''சத்தமிட்டுக் கூறினான்''.

இந்நாளிலும் இச்செய்தி நமக்கு பல விதமான பாடுகள், அடக்கு ஒடுக்கு முறைகள் மத்தியில் ஒரு நம்பிக்கையின் செய்தியாகவே வருகின்றது. எங்கள் சூழ்நிலையிலும், ''இதோ உங்கள் கடவுள்'', என்றும் ''இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி'' என்றும் சத்தமிட்டுக் கூறவே திருச்சபை அழைக்கப்படுகின்றது. உலகத்தில் ''மாம்ச சித்தத்தினால், மனுஷ சித்தத்தினால்'' (யோ 1:13) பிறக்கும் பல விதமான ஆலோசனைகளும், ஞானங்களும், திட்டங்களும் மனிதரின் கவனத்தைக் கவரப் போட்டியிடும் வேளையில் சத்தமிட்டுத் தெளிவாகத் தயக்கமின்றி தனது செய்தியைக் கூற திருச்சபை அழைக்கப்படுகிறது.

யோவான் ஸ்நானனைக் குறித்து ''முன்னோடி'' என்ற பதம் புதிய ஏற்பாட்டில் பாவிக்கப்படாமல் இருந்த பொழுதும் அவன் நிறைவேற்றின. கடமை அதுவே என்று நற்செய்தி நூல்கள் சாட்சிபகர்க்கின்றன (யார்க்கு 1:2, மத் 11:10) ''முன்னோடி'' என்று மொழிபெயர்க்கப்பட்ட மூல கிரேக்க பதம், ராணுவ ரீதியில் பாவிக்கப்பட்ட ஓர் பதம். முன்னேறும் படையினருக்கு வழியை ஆயத்தப் படுத்தும் சாரணரைக் குறித்தது. சாரணரைப் பார்க்கிலும் முன்னேறும் படையின் அரசனே முக்கியம் வாய்ந்தவர் யோவான் ஸ்நானன் இதை உணர்ந்தே கடவுளின் ஆளுகையை நிறைவேற்ற தனது சேனையை நடத்த வந்த இயேசுவுக்கு மக்கள் மத்தியில் ஒரு வழியை ஆயத்தப்படுத்தவே தான் வந்தேன் என்றும், நான் அவரல்ல, ''வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேன்'' (யோ 1:23) என்றும் ''அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்'' (யோ 3:30) என்றும், அவன் [illegible]கும கிறிஸ்து இயேசுவுக்கும் உள்ள சம்மந்தத்தைத் தெளிவுபடுத்தினான். இதுவே திருச்சபைக்கும் அதன் ஆண்டவருக்கும் இருக்க வேண்டிய சம்பந்தம். இதுவே, ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் அவன் பின்பற்றும் ஆண்டவருக்கும் இருக்க வேண்டிய சம்பந்தம். ''அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்''.

யோவான் ஸ்நானன் ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவின் முன்னோடியாக வந்தான் என்பது திருமறையின் ஒரு சாட்சி. இன்னும் அந்த கிறிஸ்து இயேசுவே தான் தலைவராகவும், ராஜாவாகவும் நடத்தும் சேனையாகிய திருச்சபைக்கு ''முன்னோடியாக'' இருந்து அவர்களுக்கு வழியை ஆயத்தப்படுத்துகிறார் என்பதும் திருமறையின் இன்னுமொரு சாட்சி ''நமக்கு முன்னோடினவராகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின் படி நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்தார்'' (எபிரேயர் 6:20). உலக வாழ்வையும் நித்திய வர்ழ்வையும் பிரிக்கும் திரைக்கூடாக ஒரு வழியை நமக்கு ஆயத்தப்படுத்தவே ஆண்டவர் தம் மக்களுக்கு முன்னோடியாக சிலுவையின் வழியை ஆயத்தப்படுத்தினார் (யோ 14:3 - 4). ''இதோ உங்கள் கடவுள்'' என்ற செய்தி ''இதோ தேவ ஆட்டுக்குட்டி'' என்ற செய்தியாக மாறி, ''என்னைப் பின்பற்ற விரும்பினால், தன்னைத் தான் வெறுத்து, தன்சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக் கடவன்'' (மார் 8:34) என்ற அழைப்பாக மாறுகிறது.

#### சுருக்க ஜெபம்

கிறிஸ்து இயேசு பெருமானே, உமது முதல் வருகைக்கு வழியைச் செவ்வையாக்க உமது தூதனை அனுப்பினீரே, மனந்திரும்ப வேண்டுமென்ற அழைப்பிற்கு உடனடியாக நாங்கள் இணங்கவும், பண்பட்ட உள்ளத்தோடு தீர்ப்பு நாளுக்கென்று காத்திருக்கவும் அருள் புரியும் நீரே பிதாவோடும், தூய ஆவியோடும், ஒரே கடவுளாக வீற்றிருந்து முடிவின்றி அரசாளுகிறீர்.

ஆமென்

''திருமறைத் தொண்டன்''.

---

### வற்றாத நம்பிக்கை

(முற்றொடர்)

கடிதத்தைப் படித்துப் பார்த்த மருத்துவன், கண்களில் நீர் வழிய கீழே விழுந்து அலெக்சாந்தரின் கால்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, ''எதிரி நாட்டு வைத்தியரான நான் கொடுத்த மருந்தை நண்பர்களின் எச்சரிக்கையினையும் பொருட்படுத்தாது குடிக்கின்ற துணிச்சல் உங்களுக்கு எப்படி வந்தது?'' என்று கேட்டான். அலெக்சாந்தர் அதற்கு ஒரே வார்த்தையில் பதில் சொன்னார். அதுதான், -''நம்பிக்கை''. அம் மருத்துவன் மீது அலெக்சாந்தர் வைத்த நம்பிக்கையின் விளைவாக, நண்பர்களின் எச்சரிக்கையினையும் பொருட்படுத்தாமல், அவன் கொடுத்த மருந்தை அருந்தினான்.

மருத்துவன் கேட்டான்: ''என்னிடம் இவ்வளவு நம்பிக்கை வைத்து நான் கொடுத்ததைக் குடித்தீர்களே, ஒரு வேளை நான் உங்களுக்கு விஷத்தையே கொடுத்திருந்தால்......''.

அதற்கு அலெக்சாந்தர் சிரித்துக் கொண்டே கூறியது: ''ஒன்றும் நடந்திருக்காது. நான் இறந்து போயிருப்பேன். அவ்வளவு தான் எப்படியும் என்னுடைய வாழ்க்கையின் இந்தச் சம்பவத்திலிருந்து உலகம் ஒரு படிப்பினையைக் கற்றுக் கொள்ளும். நீ உள்ள படியே விஷம் கொடுத்து நான் ஒரு வேளை இறந்து போயிருந்தால் நம்பிக்கைத் துரோகத்திற்கு உதாரணமாக இந்தச் சம்பவம் வரலாற்றில் இடம் பெற்றிருக்கும். நீ செய்யும் தொழில் வைத்தியம், அதில் நீ நேர்மையுள்ளவனாக இருப்பாய் என்று எதிர்பார்த்தேன். என் நம்பிக்கை வீண் போகவில்லை. என் உயிர் காக்கும் மருந்தை நீ எனக்குக் கொடுத்திருக்கிறாய். மற்றவர்கள் மீது நம்பிக்கை வைக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்ற சம்பவமாக இது வரலாற்றில் இடம் பெறும். அலெக்சாந்தர் எவ்வளவு காலம் வாழ்ந்தான் என்பது முக்கியமல்ல. வாழ்ந்த காலத்தில் அவன் எந்த விதத்தில் உலகிற்கு எடுத்துக் காட்டாக விளங்கினான் என்பதே முக்கியம். என்றான்.

ளஅலெக்சாந்தருடைய வரலாற்றில் காணப்படும் இந்தச் சம்பவம், அவன் மற்றவர்களில் எந்த அளவிற்கு நம்பிக்கை வைத்திருந்தான் என்பதற்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது.

அலெக்சாந்தர் பிறர் மீது அசையாத நம்பிக்கை வைத்துச் செயல்பட்டதன் விளைவாக மூன்று நான்கு கண்டங்களை முப்பத்திரண்டு வயதிலே வென்று வரலாற்றில் நிலையான இடத்தைப் பெற்றான்.

எந்த முயற்சியில் ஈடுபடுகிறவர்களும் பரஸ்பரம் நம்பிக்கை கொள்ளாமல் காரியங்களைச் சாதிக்க முடியாது. ஒருவன் தன்னம்பிக்கை உடையவனாயிருப்பது எவ்வளவு முக்கியமானதோ, அதைப் போலவே பிறரிடம் நம்பிக்கை வைப்பதும் இன்றியமையாதது ஆகும்.

நம்பிக்கை என்பது தனிமனித வாழ்க்கைக்கும் சமூக வாழ்க்கைக்கும் அச்சாணி போன்றது. பிறரிடம் நம்பிக்கை வைக்கத் தவறி விடுகிறவர்கள், எந்தக் கூட்டு முயற்சியிலும் ஈடுபட்டு வெற்றி காண முடியாது. இதனையே நமது திருமறை அதிகமாக வலியுறுத்துகிறது.

''அன்பு...... நம்பிக்கையில் தளர்வதில்லை'' —( I கொ. 13:7 )

''பரிசுத்த ஆவியின் வல்லமையால்
உங்களில் நம்பிக்கை பெருகும்படி,
நம்பிக்கை தரும் கடவுள், விசுவாசத்தால்
உண்டாகும் எல்லா வகையான
மகிழ்ச்சியாலும் அமைதியாலும் உங்களை
நிரப்புவாராக'' — (ரோ. 15:13)

(முற்றும்)

---

### உதயனுக்கு எங்கள் அன்பு வாழ்த்துக்கள்

யாழ். மக்களின் அபிமான செய்தித் தாளாகிய ''உதயன்'' தனது ஐந்தாவது வயதை நவம்பர் 27ம் திகதி நிறைவெய்தியது தனது ஆறுவது அகவையில் அடியெடுத்து வைத்துள்ள உதயனுக்கு, பல்லாண்டு பல்லாண்டாக பத்திரிகை உலகில், தமிழ் மக்களுக்கு வழிகாட்டும் உதயசூரியனாக ஒளிரவேண்டும் என ''உதயதாரகை'' அன்புடன் வாழ்த்துகிறது!

—ஆசிரியர்,
உதயதாரகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தாரகை ஒளி

ஒரு நூல் முழுவதையும் வேகமாகப் படிப்பதைவிட,
ஒரு பக்கத்தை நன்றாக உணர்ந்து கொள்வது மேலாகும்.
—யாரோ

## எங்கள் கருத்து

### தேசியப் பெருவிழா!

கடந்த நவம்பர் மாதம் 21 ஆம் நாள் தொடங்கி 27 ஆம் நாள் வரை, ஈழத் தமிழ்ப் பகுதிகளிலும், தமிழ் கூறும் நல்லுலகின் சில நாடுகளிலும், வட – கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் விடுதலைப் போராட்டத்தில் வீர மரணமெய்திய மாவீரர் நினைவு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விடுதலைப் போராட்டத்தில் மரித்த வீரர்களின் இலட்சியத்தை நிறைவு செய்ய, பெருந்தொகையான தமிழ் மக்கள் தத்தம் பங்கை அளிக்க ஆர்வத்துடன் கூட்டாக முன்வந்தது இவ்விழாவின் முக்கிய அம்சமாகும்.

ஒரு தேசியப் பெருவிழா என்று கருதுமளவிற்கு முழு நிறைவுடன் இவ்விழா கொண்டாடப்பட்டது. மக்களின் இதயங்களில் குமுறிக் கொண்டிருந்த சுதந்திர வேட்கையைப் பிரதிபலிக்கும் ஓர் எழுச்சி விழாவாக இது அமைந்தது. தமது உயிரைப் பொருட்படுத்தாது, எவ்வித வசதிகளையும் நாடாது, போர்க்களத்தில் வீரமரணமெய்திய நூற்றுக் கணக்கான இளைஞரும், யுவதிகளும், தமது இலட்சியத்தில் உறுதியாக நின்று, மிகுந்த கட்டுப்பாட்டுடன் நடத்தி வரும் இவ்விடுதலைப் போராட்டத்தில், எல்லாம் வல்ல இறைவனின் திருவுளச் சித்தம் நிறைவேற வேண்டுமென ஒன்றுபட்டு மன்றாடுவது நமது கடமை.

கடந்த 40 ஆண்டுகளாக, சிங்கள ஆதிக்கத்திலிருந்து தமிழ் மக்கள் விடுதலை அடைய வேண்டுமென, தமிழ்த் தலைவர் பல வழிகளில் பேச்சுவார்த்தை, அகிம்சை ரீதியால் விடுதலைப் போராட்டத்தை நடத்தி வந்தனர். சாத்துவிக முறை பலனளிக்கவில்லை. தமிழ் மக்களின் மனித உரிமைகள் படிப்படியாகப் பறிக்கப்பட்டு வந்தன. இப்போ தமிழினத்தையே இந்நாட்டில் பூண்டோடு அழிக்கும் திட்டம் செயல்பட்டு வருகிறது என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். இத்தீய சக்தியை எதிர்த்து முறியடிக்க தமிழ்ப் போராளிகள் முன்வந்தனர். போர்க்களத்தில் இறங்கிப் போராடி வருகின்றனர். இப்போராட்டத்தில், இலங்கை இராணுவம் செய்து வந்த அனர்த்தங்களால், தமிழ் மக்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். இதனால் தமிழர்களின் சுதந்திரத் தாகத்தை அடக்கி விடலாமென நமது அரசு எண்ணியிருக்கலாம். ஆனால், அவர்கள் எதிர்பார்த்ததிலும் பார்க்க, தமிழ் மண்ணைக் காக்க மக்கள் வீறுகொண்டெழுந்தனர். விடுதலை உணர்வு மேலோங்கி நிற்கிறது. தாம் இன்னொரு இனத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளனர் என்பதை தமிழ் மக்கள் அதிகமாக உணரத் தொடங்கினர்.

இவ்விடுதலைப் போராட்டத்தில் தமிழ்ப் பகுதியில் உள்ள திருச்சபையின் பங்கென்ன? திருச்சபை வன்முறையை ஏற்கவில்லை. ஆயினும் சாத்துவிகப் போராட்டததில் முழுமையாகப் பங்கெடுத்து வருகிறது. இந்நாட்டின் தென்பகுதியிலுள்ள திருச்சபை, தமிழ்ப் பகுதிகளில் நடக்கும் அநியாயங்களையும், அட்டூழியங்களையும் கண்டும் காணாததும் போல். கேட்டும் கேளாததும் போல் அமைதியாக இருக்கிறது. ஆனால் தமிழ்ப் பகுதிகளிலுள்ள திருச்சபை தமிழினத்திற்கு எதிராக நடத்தப்பட்டு வரும் அட்டூழியங்களை, கொடுமைகளை எதிர்த்து வருகிறது. அனைத்துலகத் திருச்சபை மாமன்றம் அறியச் செய்தது. இதன் விளைவாகச் சில குருமார் இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர். ஆலயங்கள், குரு இல்லங்கள் சில, குண்டுகளால் தகர்க்கப்பட்டன. துன்பத்தினூடாகவே திருத்தொண்டு புரியலாம் என இயேசு பெருமானே முன்மாதிரியாகக் காட்டினாரல்லவா?

இப்போராட்டத்தால் பாதிக்கப்பட்ட, விதவைகள், அநாதைப் பிள்ளைகள், வீடற்றோர், வாலிபர், யுவதிகள் ஆகியோரின் துயர் துடைக்கும் பணியில், தன்னாலியன்றளவு திருச்சபை ஈடுபட்டு வருகிறது. இதில் தென் இந்தியத் திருச்சபையின் யாழ். ஆதீனப் பேராயரும் குருமாரும் ஆற்றிவரும் தொண்டுகள் குறிப்பிடத்தக்கன. தமது உயிருக்கே ஆபத்து வரக்கூடியதாயிருந்த போதிலும்; ஏற்ற போக்கு வரத்து வசதிகள் இராத போதிலும், இரவு நேரங்களில் காடுகளிலும், மடங்களிலும், பதுங்கியிருந்து, தமிழ் [illegible] துயர் துடைக்கும் பணி செய்வதே தம் தலையாய கடமையென்ற குறிக்கோளுடன் நமது குருமாரிற் சிலர் தொடர்ந்து பணியாற்றி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஒற்றையாட்சியின் அமைப்புக்குள் தான் தேசிய ஒருமைப்பாடு என்ற பழைய பல்லவியைப் பாடாமல், சமஷ்டி அமைப்பின் கீழ் தமிழர்க்குத் தன்னாட்சி உரிமை வழங்கப்பட வேண்டும். இதற்குரிய காலம் வந்துவிட்டது. இதுவே எமது கருத்தாகும். தன்மானமுள்ள எல்லாக் கிறிஸ்தவ தமிழர்களும் இதனையே விரும்புகின்றனர். தமிழ் மக்கள் சுயாதீனமாக வாழும்போது, தம்மிடம் வாழும் சிறுபான்மை இனத்திற்குரிய உரிமைகளை வழங்கி, அவர்களுடன் ஒன்றுபட்டு வாழ்வார்கள். தமிழர் சுயாதீனமாக வாழ்ந்தால் தான் சிங்களவரும் சுயாதீனமாக வாழலாம். இருசாராரும் ஒரே [illegible] நாட்டில் தன்மானத்தோடு வாழலாம்.

### இன்றைய இறையியல் கல்வி

-DRA-

குருமாராகப் பயிற்சி பெறும் மாணவர் இன்று பெற்று வரும் இறையியல் கல்வி, பெரும்பாலும் மேற்கத்திய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இறையியலென்றே நாம் கூறலாம். இதுவே இந்திய இறையியல் அறிஞர் பலரின் கருத்துமாகும்.

இத்தகைய கல்வி மேற்கத்திய பண்பாட்டில் அடித்தளமுற்றதாகவும், நம் நாட்டுப் பண்பாட்டோடு எவ்வித தொடர்பும் அற்றதாகவும் காணப்படுகிறது. பாடத்திட்டங்களும், பயிற்சி முறைகளும் தேர்வு வகைகளும் மேற்கத்திய வழக்கைச் சார்ந்து காணப்படுகின்றன.

இன்றும் நம் நாட்டில், ஆங்கில மொழி வழியாக இறையியலைக் கற்பதும், ஆங்கில நூல்களையே ஆதார நூல்களாகக் கொள்வதும் சிறப்பானதாகக் கருதப்பட்டு வருகிறது. இருந்தும், இந்தியாவில் சிலவிடங்களில் மாநில மொழிகள் மூலம் இறையியல் கற்பிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

நம் நாட்டுச் சமயங்களுடனே, பண்பாட்டுடனே இறையியற் கல்விக்குக் குறிப்பிடத்தக்க ஈடுபாடு இருக்க வேண்டுமென்ற பெரு நோக்கோடு, இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரி சுன்னாகத்தில் 1983 இல் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

தற்போது இந்தியாவில் அரசரடியில் கற்பிக்கப்படும் இறையியல் கல்வியில் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதே நோக்குடன் சுன்னாகம் இறையியல் கல்லூரியும் செயல்பட்டு வருகிறது.

பிற பண்பாட்டுச் சூழலில் தோன்றிய மேற்கத்திய பாணி இறையியல் கல்வி, சுதந்திர இலங்கையில் நாளுக்கு நாள் புதிதாகத் தோன்றிவரும் தேவைகளை நிறைவேற்றவும், குறிப்பாக வெவ்வேறு இனத் தொடர்புகளின் விளைவால் வரும் அறை கூவல்களைச் சமாளிக்கவும் போதுமானதாக அமையவில்லை என்பதை பேராயர் அம்பலவாணர் அவர்கள் உணர்ந்தார். கீழ் நாட்டுப் பண்பாட்டில் அடித்தளமுற்றுத் தன்னுட்டு மயமாக்கப்பட்ட இறையியலின் இன்றியமையாமையை மூன்றும் உலக இறையில் அறிஞர் பலர் உணர்வதை பேராயர் வலியுறுத்திக் காட்டினர்.

ஆகவே, நாம் இங்கு வலியுறுத்த விரும்புவது வாழ்க்கைச் சூழல் சார்ந்த இறையியல் மட்டுமே, அச் சூழலில் எழும் கேள்விகளுக்கும், பிரச்சினைகளுக்கும் விடையளிக்கத் தக்க நிலையில் உளது.

யாழ். நகரில் அல்லது கிராமப் புறங்களில் இன்று எழும் ஒரு பிரச்சினைக்கு, இங்கிலாந்து அல்லது அமெரிக்காவில் வேறொரு சூழலில் என்றோ ஒருவர் எழுதிய இறையியலில் விடையைத் தேடுவது முறையன்று.

நாம் வாழும் சூழலில் எழும் கேள்விகளுக்கு இன்று இறைவன் என்ன விடையளிக்கிறார் என்று நம் இறையறிவின் அடிப்படையிலும், நாம் இறையனுபவத்தின் மூலமாகவும் விடைகாண முயல்வதே சூழமைவு சார்ந்த இறையியலின் கடமை

சபை அமைப்புக்களையும் அதோடு சார்ந்த நிறுவனங்களையும் நிர்வகிக்கவும், அருளுரையாற்றவும், திருவருட்சாதனங்களைப் பகிர்ந்தளிக்கவும குருத்துவ மாணவர்களைப் பயிற்றுவிப்பதே முன்னுள் இறையியல் கல்வி அமைப்பின் நோக்காயிருந்தது.

இதுவே அக்காலச் சபைகளின் எதிர்பார்ப்பு, பெரும்பான்மையான சபைகள் இன்றும் இதையே தங்கள் குருமாரிடமிருந்து எதிர்பார்க்கின்றன.

ஒரு குருவானவர் சபைப் பாரம்பரியத்திற்குப் புறம்பாகப் போகாது சபையார் வீடுகளை ஒழுங்காகச் சந்தித்து, சாதுரியமாக அருளுரையாற்றி, சபையில் நெடுங்காலமாக இருந்து வருகிற வழிபாட்டு முறையைப் பின்பற்றி, சபைக் குழுவின் விருப்புக்கு அமைந்து செயல்பட்டால் அவர் நல்ல குருவானவர் என்று ஏற்றுக் கொள்ளப்படுகிறார்.

பாரம்பரியத்திற்குப் புறம்பாகவோ, சபையாரின் விருப்புக்கு மாறாகவோ அவர் புதிதாக எதையாவது முயற்சித்தால் — அது பயனுள்ளதாக இருந்தாலும் - அவர் சபையின் வெறுப்புக்கும் எதிர்ப்புக்கும் ஆளாகின்றார்.

ஆகையால் சபைகளின் வெறுப்பையும் எதிர்ப்பையும் ஏற்கத்துணிவில்லாது, அச் சபைகள் எதிர்பார்க்கும் பாரம்பரியச் சடங்குகளை மட்டும் நிறை வேற்றும் குருமார்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளாகவே நமது இறையியற் கல்லூரிகள் இயங்கி வருகின்றன.

சுருங்கக் கூறின், நமது சபைகளின் எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறு நமது மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர். இப் பயிற்சிக்குப் பின் அருட்பொழிவு பெற்றுத் திருச்சபையின் நல்ல பாரம்பரியக் காப்பாளர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

இத்தகைய கல்வி முறை சரியா? என்பதுதான் கேள்வி, பாரம்பரியத்திலிருந்து தாங்கள் பெற்றுக் கொண்ட உண்மைகளைத் திறனாய்வு செய்வதற்கோ, புதிதாக உருவாகும் சூழ் நிலைகளில் இறைவனின் திருவாக்கை அறிந்து கூறவோ, கிறித்தவம் சாராத மக்களோடும் அமைப்புக்களோடும் உறவு கொள்ளவோ போதுமான தகுதியோ, பயிற்சியோ அன்னாருக்கு இல்லாதிருந்தது. இந்நிலை மாறவேண்டும்.

— (வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A Northern Focus

In a part of the country where optimistic scenarios have had a poor track record, in recent months, it is good to read of the arrival at Pt. Pedro of Kumana the Sri Lankan freighter with not merely consumer goods but with currency notes for the Jaffna banks to tide over the currency crisis, in the Peninsula.

Innumerable have been the ramifications of the contemporary "situation" in the life of the community. But none have been so overpowering as the inabilty of the monthly wage-earner in Jaffna to do anything with a cheque issued to him by his employer at the end of the month when he had braved the sun and the rain and the political weather to attend to his daily chores at his work place. Herein lies a huge and unexpected irony. The daily wage earner is able to withstand the "slings and arrows" of the outrageous crisis more confidently than his bourgeois companion wielding only a 'cheque'.

We sincerely hope that arrangements will soon be made to pay all employees in cash for which they are entitled in a time of 'crisis' when cheques become documents of "uncurrent pay".

Some venturesome souls in the world achieve fame by scaling mountain peaks or plumbing new ocean depths, they find a place in the Guiness Book of World Records (Representatives of the Guinesses, the Anglo-Irish Beerage nobility claim it is the biggest selling volume after the Bible) There are others who though not so ambitious, excell in "odd ball olympics" such as standing on one leg for seven and a half hours at one stretch.

But no less impressive than these are the tribe of our commuters who, during this period of crisis, travel to Colombo from Jaffna by the Kombadi Veddai route. They travel on pillions of cycles or in bullock carts, tractor-trailers, wading some distance (not negligible) in knee-deep water and finally ending their marathon in plastic boats (some 70 of which ply to and fro taking human cargo from one end of the stream to the other) The fare is Rs. 25/- per person and Rs. 35/- if the bicycle also is to be hauled. Theirs is a feat that does not go into record.

### The Celestine Feranando

(continued from Page 1)

growth of the Sinhala-Buddhist Nationalism and the emergence of Tamil Nationalism. One expression of Tamil Nationalism was the demand for a federal system of government and subsequently for a separate state. Final resolution of the ethnic problem, says the Rev. Perera lies in the distribution of power between the centre and the periphery (devolution) and the unit of devolution. The Rev. Perera concludes his lecture with the Psalmist's note of hope-

*"Love and truth will meet,*
*Justice and peace will kiss each other*
*Truth will spring up from the ground,*
*and justice will look down from the sky."*
*Yea, the LOrd will give what is good,*
*and our land will yield its increase*
*Justice will go before Him,*
*and make His footsteps a way.*

### 175th Anniversary.........

(continued from page 1)

and almost her last words, while hardly concious of any thing were,

*"Glory be to God the Father - to God the Son - to God the Holy Ghost"*

— Mrs. Harriet Winslow

### AN APPRECIATION

(Continued from page 1

dent of the Primary Sunday School, of the Puliyantivu Methodist Church. The little ones adored "Sybil-Teacher" who made the Bible stories come alive to them, and were in turn adored by her.

Sybil had many sterling qualities, and was always willing and ready to step in and help when help was needed anywhere. She was a very good conversationist and one could chat with her long without getting bored. What her friends liked most in her, was her ready wit, and quiet humour, which sometimes kept them shaking with laughter.

Most of her pupils kept in touch with her after leaving school, and they were always welcome in her home.

Sybil was a spiritual help to many, and her Christian witness, will live long in the Church and among the people, and her spirit will linger among her relatives, pupils and friends, who loved her, dearly.

May her soul Rest in Peace.

### Prof. Mithra Augustine Director, Ecumenical Instiute

Prof. Mithra Augustine, Former Principal of Madras Christian College is now the Director of the Ecumenical Institute of Whitefield in Banglore.

Registered as News Paper at the P. O. Sri Lanka under No. Q/J/104/89
News Printed for the Jaffna Diocese of the Church of South India at The American Ceylon Misson Press 182, 1st, Cross Street, Jaffna on Friday, 7th of Nov. 1990 published by The Rev. G. D. ANANDARAJAN, 182, First Cross Street, Jaffna.

## Jaffna College Prize Giving Extracts from the address delivered by the

### Chief Guest Rev. Dr. Francis Soundararaj

The third change which education has to reckon with in the twentieth century is that caused by knowledge explosion. Never perhaps in the history of human knowledge, since the Renaissance, had there been such a phenomenal growth of knowledge as at present. Hence we speak about an "explosion" of knowledge. This is primarily because of the rapid development of Science and technology. Just a small instance will do to convince us about the rapidity of the growth of knowledge. Speaking about the socalled "chip-revolution" one is astounded to note the incredible rate of its development. In 1951 there was jnst 1 circuit per chip; in 1964 it became 10; in 1970, 100; in 1976, 32,000 and in 1982, 100,000. No wonder computers are changed in increasingly shorter intervals by improved models. Again the interval beetween discovery and application of new gadgets and devices is becoming shorter and shorter. Photography was discovered In 1727 and it took 112 years for the first camera to be marketed in 1839. The electric bulb took 65 years and now computers are changed in fewer than two years. Also the size of technology gets reduced as knowledge increases and it becomes cheaper. The revolution in micro-electronic base technology in the cause of such a change. All these pose a challenge to education. The conventional monolithic and cumbersome educational structure, often recalcitrant to change, will not do. Our system ought to become less formal and more flexible to bring about changes to meet knowledge explosion. In Japan formal university education is supplemented by continuing educational prgroammes run by industries. themselves which periodically update knowledge of their employees. In U. K. work and study are linked within the formal system so that the learner may be in step with the current development of knowledge.

Fourthly, the conventional understanding of knowledge is giving way to lift our vision to more receding horizons. In the past, Economics indetified land, labour, capital and distribution as factors more or less static in economic activity. Now the concept of land is changing. The raw materials themselves are replaced. Wood is replaced by fibre-glass for instance; steel by synthetic material; the plastics have supplanted many others. The conventional understanding of labour is changing as automation is increasingly used. Labour is further modified by the replacement of Repair-Culture by Replacement-Culture: we are now used to replace gadgets instead of repairing them.

These changes offer another challenge to higher education. The so-called theoretical knowledge that was the hall-mark of education in the earlier decades of this century is found inadequate to meet present needs. More skill-orientation is reguired to go hand in hand with knowledge acquisition. white collar engineers and veterinarians are now expected to be also mechanics and stockmen and I. I. Ts will wear out in polish if they do not take the field of application seriously. An educational system which is conservative and traditional is often a stumbling block to the development of knowledge just as an attitude of conservative purism towards a language hampers its growth.

As educational planners and teachers we are at the cross roads of change. The directions in whith educational development may be determined are becoming clear. On the one hand liberal education needs diversification to accommodate the change in, and growth of, knowledge that we have witnessed The rate of accommodation of knowledge explosion ought therefore to be accelerated. On the other hand equity in education, especially in countries where there are regional and social imbalances, may be achieved by facilitating larger and greater participation by those who have been kept outside the pales of knowledge. The greatest challenge is to make the academi still astutely pursue academic excellence. Educational institutions ought not to deteriorate into coaching or rehabilitation centres; the task of shaping minds in order to make them reach utmost brillience ought not to be compromised under social pressure. It is according to the success or failure of holding these goals in balance, our educational service will be judged in the immediate future.

(to be continued)

### Christ Church bombed

A bomb was dropped between 3-30 p. m. and 5-00 p. m. on Christ Church, Jaffna, on the 29th June, 1990, three days after the 118th anniversary of its consecration. This blast destroyed the entire presbytery, the roof and most of the church complex that is in the corner where the Second Cross Street cuts the Main Street. Prior to that, and even after, much damage has been caused to the ParishHall, the Sexton's Quarters, and the vicarage, all in the same compound.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org